# சிருங்கேரி சாரதா பீடம் கிளை புதிய கட்டடம் கட்ட பூமி பூஜை

காஞ்சிபுரம், ஜூன் 26-

'எல்லா மக்களும் பயன் பெறும் வகையில், காஞ்சியில் சிருங்கேரி சாரதா பீட புதிய கட்டடத்தில், தியான மண்டபம் உட்பட பல்வேறு அமைப்புகள் உருவாகும்' என்று, சிருங்கேரி பீடத்தின் தலைமை நிர்வாகி கவுரி சங்கர் கூறினார்.

காஞ்சிபுரத்தில் சிருங்கேரி சாரதா பீட மையத்தில், புதிய கட்டடம் கட்டுவதற்கான பூமி பூஜை நேற்று சிறப்பாக நடந்தது.

ஆதிசங்கரரால், சனாதன தர்மத்தை பாதுகாக்க உருவாக்கப்பட்ட சிருங் கேரி மடம், தலையாய மடம். புராதனமான இம்மடத்தின் ஜகத்குரு ஸ்ரீ பாரதி தீர்த்தர். இப்பீடத்தின் கிளை காஞ்சிபுரம் சாலைத் தெருவில் அமைந்துள்ளது.

இங்கு பல நூற்றாண்டுகளாக வேத பாட சாலை மற்றும் நவராத்திரி விழாக்கள் சிறப்பாக நடந்திருக்கின்றன. தற்போதைய ஜகத்குருவுக்கு முந்தைய குருவான ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த சுவாமிகளும் இங்கு வந்து மக்களுக்கு ஆசி வழங்கியது உண்டு.

பிரிட்டிஷார் ஆட்சியில், இங்கு சுவாமிகள் வரும்போது, பாதுகாப்பு தர போலீஸ் அனுமதிக்கும் விசேஷ உத்தரவு, பின்பு ஆற்காடு நவாபு காலத்தில், 'உலக குரு வந்து தங்கும் இடம்' என்ற ஆவணக் குறிப்புகள் கொண்ட இந்த



சிருங்கேரி சாரதா பீடம் காஞ்சிபுரம் கிளையில், புதிய கட்டடம் கட்டுவதற்காக, நேற்று பூமி பூஜை நடந்தது. பீடத்தின் தலைமை நிர்வாகி கவுரிசங்கரிடம், தொண்டை மண்டல ஆதீனம் ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், ஓய்வு பெற்ற நீதிபதி பாஸ்கரன் ஆகியோர் பூமி பூஜைக்கு, கல் எடுத்துக் கொடுத்தனர்.

இடம் தற்போது, சிதிலமடைந்திருக்கிறது.

மொத்தம் 15 சென்ட் பரப்பில் உள்ள இந்த இடத்தை புதுப்பித்து, தியான மண்டபம், மற்றும் அன்னை சாரதா, ஆதிசங்கரர் ஆலயம், ஒன்றரைக் கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படுகிறது.

இதற்கான பூமி பூஜை நேற்று காலை காஞ்சிபுரம் கிளையில் நடந்தது. சிருங்கேரி சாரதா பீடத்தின் தலைமை நிர்வாகி கவுரி சங்கர் தலைமையில், மேள தாளங்கள் ஒலிக்க, வேத விற்பனர்கள் வேதங்கள் ஓத பூமி பூஜை சிறப்பாக நடந்தது. சிருங்கேரி மடம் தலைமை நிர்வாகி கவுரி சங்கர் இதை முன்னின்று நடத்தினார்.

காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் ஞானப் பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், ஓய்வு பெற்ற நீதிபதி பாஸ்கரன் உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

விழாவில், பேசிய சிருங்கேரி மடத்தின் தலைமை நிர்வாகி கவுரிசங்கர் கூறியதாவது:

நீண்ட நாட்களாக நிறைவேற்றப்பட வேண்டிய பணி இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது. எல்லாரும் பயன்பெறும் வகையில் அமையும் தியான மண்டபம் உட்பட அனைத்து பணிகளும் திட்டமிட்ட காலத்தில் நடைபெறும்.

எல்லா மக்களும், எல்லா நலமும் பெற, ஜகத்குரு பாரதி தீர்த்தர் அருளாசியுடன், இப்பணி, தொடங்கப்பட்டிருக்கிறது என்றார்.

தொண்டை மண்டல ஆதின சுவாமிகள் பேசும் போது கூறியதாவது: ஆதி சங்கரரின் லட்சியத்தைப் போற்றிப் பரப்பும் சிருங்கேரி மடம் பல்லவ நாட்டின் பகுதியான காஞ்சியில் புதிய கிளை அமைப்பதற்கு வாழ்த்துக்கள்.

இந்து மதத்தை காக்க உருவான விஜயநகரப் பேரரசை உருவாக்கிய துறவி வித்யாரண்யர், இம்மடத்தின் மதிப்புக்குரிய சுவாமிகளாக இருந்தவர். இப்போது, இந்த அறப் பணி மூலம் காஞ்சிக்கு மற்றொரு பெருமை கிடைக்கிறது என்றார்.

விழாவில் இன்ஜினியர் பத்மநாபன், சென்னை மடம் தர்மாதிகாரி சுப்ரமணியம் உட்பட பலர் பங்கேற்றனர்.